**சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)**
**திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்**
**MCOP .No.170 /2018**

**நாள் : 04.08.2025**

**ம.சா.** 2 வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. நரேந்திரன் | மாவட்டம் | : | திருப்பத்தூர் |
| தந்தை பெயர் | : | திரு. ஆனந்தன் | வயது | : | 31 |
| ஊர் | : | திருப்பத்தூர் | தொழில் | : | வியாபாரம் |
| வட்டம் | : | திருப்பத்தூர் | தேசியம் | : | இந்தியன் |

**1ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கு தமிழ் எழுதப்படிக்க தெரியும். விபத்து சமயத்தில் நான்கு சக்கர வாகனமான Hundai I 20 வாகனத்தை நான் ஓட்டிச் சென்றேன். காவல்நிலையத்தில் புகார் மனு கொடுத்த தேதி நினைவில் இல்லை. விபத்து நடந்த தேதி 02.07.2017 ஆகும். நான் இரண்டு நாட்கள் ICU ல் இருந்தேன். நான் மியாட் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். நான் சொல்ல சொல்ல போலீஸார் எழுதினார்களா என்றால் தெரியாது. எத்தனை கையொப்பமிட்டேன் என்பது நியாபகம் இல்லை. எழுதப்பட்ட பேப்பரில் தான் கையொப்பம் வாங்கினார்கள்.

2. புகார் வாக்குமூலமாக பெற்றார்களா அல்லது புகார் மனுவாக எழுதி கையொப்பம் பெற்றார்களா என்பது எனக்கு நியாபகம் இல்லை. எனெனில் எனக்கு cervical fracture என்பதால் கவனிக்கும் நிலையில் இல்லை. 1 ஆம் எதிர்மனுதாரரின் பெயர் விலாசத்தை போலீஸார் தான் கண்டறிந்தார்களா என்றால் ஆமாம். மியாட் மருத்துவமனையில் 9 நாட்களுக்கு மேல் சிகிச்சையில் இருந்தேன். எனது சத்திய பிரமாண வாக்குமூலத்தில் கண்ட மருத்துவ செலவினங்களை நிரூபிக்க ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

3. என்னிடம் காட்டப்படும் ம.த.சா.ஆ.17 மருத்துவ பில்லில் ரூ.1,46,201/-, செலவானதாக கண்டுள்ளது என்றால் சரிதான். அதை தவிர வேறு மருத்துவபில்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் விபத்தின் போது காரை ஓட்டிச் சென்ற விவரத்தை சத்தியபிரமாண வாக்குமூலம் அல்லது மனுவில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனது மாத வருமானம் ரூ.50,000/- என்பதை காட்ட சம்பளப்பட்டியலை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த போது இரவு 10 மணிக்கு மேல் இருக்கும். Hero Honda இருசக்கர வாகனத்தில் மூன்று நபர்கள் அமர்ந்து வந்த நிலையில் divider அருகே காரின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார்கள்.

4. போலீஸார் புகார் வாக்குமூலத்தில் கையொப்பம் பெற்ற போது அதனை படித்து பார்க்கவில்லை. என்னிடம் காட்டப்படும் ம.த.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையானது நான் கொடுத்த புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். ம.த.சா.ஆ.1 ல் எந்த ஒரு இடத்திலும் மூன்று நபர்கள் இருசக்கர வாகனத்தில் வந்து விபத்தை ஏற்படுத்தியதாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அதைபோல் முதல் தகவல் அறிக்கையில் இருசக்கர வாகனத்தை நபரின் பெயர் பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். விபத்து சமந்தமாக போலீஸார் என்னை ஒரே ஒரு முறை விசாரித்தனர்.

5. 1 ஆம் எதிர்மனுதாரரின் பெயரை போலீஸார் என்னிடம் எப்போது சொன்னார்கள் என்றால் நியாபகம் இல்லை. புகார் வாக்குமூலம் கொடுக்கும் போதே 1 ஆம் எதிர்மனுதாரரின் பெயர் குறிப்பிட்டு கொடுத்திருந்தால் முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டு இருக்கும் என்றால் சரிதான். அவ்வாறு இல்லாததால் தான் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். 1 ஆம் எதிர்மனுதாரர் சமந்தப்பட்ட ஆவணங்கள் எவ்வாறு கிடைத்தது என்பது எனக்கு தெரியாது. இருசக்கர வாகனத்தில் வந்த மூன்று நபர்களின் பெயர் முகவரி எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

6. விபத்திற்கு பின்னிட்டு மூன்று மாதம் நான் மருத்துவரின் ஆலோசனைப்படி bed rest எடுத்துக்கொண்டேன். விபத்திற்கு பின்னிட்டு என்னால் நீண்ட தூரம் பயணிக்க முடியவில்லை. அத்துடன் கணினி முன்பாக அமர்ந்து நீண்ட நேரம் வேலை செய்யவும் முடியவில்லை. 2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்த போது எனக்கு ஏற்பட்ட காயங்கள் முழுமையாக குணமடைந்துவிட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதைபோல் ஊனம் இல்லை என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் எனக்கு விபத்தினால் long term implication இருப்பதாக சாட்சி கூறுகிறார்.

7. விபத்து சமயத்தில் வழக்கு பதிவு செய்ய விசாரணை அதிகாரியையும், எனக்கு சிகிச்சை அளித்த மருத்துவரையும் அழைத்து விசாரிக்க எனக்கு ஆட்சேபனை இல்லை. 1 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பதிலுரையை படித்து பார்த்தேனா என்றால் இல்லை. ஆனால் பதிலுரை தாக்கல் செய்த விவரம் தெரியும். மேற்படி பதிலுரைக்கு மறுப்பு தெரிவிக்கும் விதமாக நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தூய கரங்களுடன் நீதிமன்றத்தை அனுகாததால் கோரியப்படி இழப்பீடு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

8. எனது மனுவில் 4 வது பத்தியில் கண்டுள்ள கோரிக்கைக்கு ஆதரவாக எவ்வித ஆவணங்களையும் தாக்கல் செய்யாததால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரியாக விபத்து நடக்காததால் தான் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1 ஆம் எதிர்மனுதாரரிடம் இருந்து பணம் பறிக்கும் நோக்கத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

**நீதிமன்ற கேள்வி**

1. விபத்து நடந்த சமயத்தில் என்ன பணி செய்தீர்கள்?

**பதில்**: சென்னை ராஜராம் Construction நிறுவனத்தில் சூப்பர்வைசராக பணியில் இருந்தேன்.

2. நீங்கள் என்ன படித்துள்ளீர்கள்?

**பதில்** : நான் பி.இ ECE படித்துள்ளேன்.

எனது சம்பளபில்லை தாக்கல் செய்யாதற்கு காரணம் உண்டா என்றால் சிறிய நிறுவனம் என்பதால் சம்பள பட்டியல் வழங்கப்படமாட்டாது.

**1 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாராணை**

1. நான் ராஜராம் Construction நிறுவனத்தில் சூப்பர்வைசராக பணிபுரிந்ததற்கான ஆவணம் எதையும் நாளாவது தேதி வரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு சம்பளம் account மூலமாக வழங்கப்பட்டது என்றால் சரிதான். அதற்குண்டான கணக்கு பட்டியல் எதையும் நாளாவது தேதி வரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள ரூ.50,000/– சம்பளமனது விபத்து சமயத்தில் நான் பெற்ற சம்பளமாகும். மேற்படி ராஜராம் Construction நிறுவனத்தால் வழங்கப்பட்ட பணி நியமன உத்தரவை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி,
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.